பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**08 06 2026** **06 45**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதில் இளைஞர்களும், தொழில்முனைவோரும் முக்கிய பங்காற்ற வேண்டும் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம். பிர்லா கூறியுள்ளார்.

**2.** நாட்டில் சமையல் எரிவாயு, பெட்ரோல் மற்றும் டீசல் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

**3.** தமிழகத்தில் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தின் சாத்தியக் கூறுகள் குறித்து மாநில அரசு ஆய்வு செய்து வருவதாக மின்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் கூறியுள்ளார்.

**4.** தமிழகத்தில் **10** மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. உலக யோகாசன சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ஹீனா ரோஜ்கர் தங்கப் பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதில் இளைஞர்களும், தொழில்முனைவோரும் முக்கிய பங்காற்ற வேண்டும் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம். பிர்லா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வளர்ச்சியின் பலன்கள் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் சென்றடைய வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக கூறினார்.

வளங்களை உருவாக்குவதுடன் நன்னெறிகளையும் பின்பற்றும்போதுதான் நேர்மறையான சமூக மாற்றம் ஏற்படும் என்று அவர் தெரிவித்தார்.

கல்வியறிவு, தொழில்நுட்பத் திறன் ஆகியவற்றைக் கொண்ட இளைஞர்களே வளர்ச்சியடைந்த இந்தியாவின் அடித்தளம் என்று அவர் குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்களை இளைஞர்கள் அறிந்து செயல்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

இளைஞர்கள் வேலை தேடுவோராக இல்லாமல், வேலை வழங்குபவர்களாக மாற வேண்டும் என்று திரு. ஓம் பிர்லா அறிவுறுத்தினார்.

<<<<>>>>

நாட்டில் சமையல் எரிவாயு, பெட்ரோல் மற்றும் டீசல் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

கர்நாடகாவின் தார்வாரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிற நாடுகளைவிட இந்தியாவில் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு விலை குறைவாகவே உள்ளது என்றார்.

கப்பல் போக்குவரத்து முறையாக நடைபெறாத சூழலிலும், சீரான எரிபொருள் வினியோகத்தை அரசு உறுதி செய்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்த சூழ்நிலையில் எரிவாயு சிலிண்டர் விலை உயர்வு தவிர்க்க முடியாதது என்று அவர் கூறினார்.

இதை விமர்சிப்பவர்கள் உலகளாவிய சூழலைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தின் சாத்தியக் கூறுகள் குறித்து மாநில அரசு ஆய்வு செய்து வருவதாக மின்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் கூறியுள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இத்திட்டத்தை மாநில அரசு கைவிட முடிவு செய்துள்ளதாக வெளியான தகவல்கள் தவறானவை என்று கூறினார்.

**(Voice Byte — Nirmal Kumar — 47 Sec)**

<<<<>>>>

கோயில்களில் பக்தர்கள் எளிதில் தரிசனம் செய்ய இணையதளம் மூலமாக சிறப்பு தரிசன டிக்கெட் வசதி அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் கூறியுள்ளார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இணையதளம் பயன்படுத்த தெரியாதவர்களுக்கு சிறப்பு மையங்கள் மூலம் இவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

**(Voice Byte — Ramesh — 47 Sec)**

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன் மலைப்பகுதியில் நெடுஞ்சாலை மற்றும் விளையாட்டு உள்கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும் என்று மாநில நெடுஞ்சாலை மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா கூறியுள்ளார்.

கள்ளக்குறிச்சியில் நேற்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நபார்டு வங்கி மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் உதவியுடன் சாலைகள் மேம்படுத்தப்படும் என்று கூறினார்.

கல்வராயன் மலைப் பகுதியில் 200 பேர் தங்கும் வகையில் விளையாட்டு வீரர்கள் விடுதி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் திரு. ஆதவ் அர்ஜுனா தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தற்போது இல்லை என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. சண்முகம் கூறியுள்ளார்.

புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்கள் நலனுக்காக திமுகவுடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஒருங்கிணைந்து செயல்படும் என்று தெரிவித்தார்.

பிரச்சினைகளின் அடிப்படையில் த.வெ.க. அரசுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமது நிலைப்பாட்டை எடுக்கும் என்று அவர் கூறினார்.

717 மதுக்கடைகளை மூடும் மாநில அரசின் நடவடிக்கை வரவேற்கத்தக்கது என்று கூறிய திரு. சண்முகம், மனமகிழ் மன்றங்களையும் அரசு அகற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் தவெக அரசு மாற்றத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்த்த நிலையில், மக்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியிருப்பதாக அமமுக பொதுச்செயலாளர் திரு. டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தல் வாக்குறுதிகளுக்கு மாறாக தவெக அரசு செயல்படுவதாக குற்றம் சாட்டினார்.

இதனால் விவசாயிகளும், பொதுமக்களும் அதிருப்தியில் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

வாக்குறுதிகளை நிறைவேற்ற கால அவகாசம் தேவைப்பட்டால் கூட சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டுவதில் கால அவகாசத்தை கோரக்கூடாது என்று திரு. டி.டி.வி. தினகரன் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தின் சில இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, திருப்பூர், தேனி, திண்டுக்கல், கன்னியாகுமரி, ஈரோடு, சேலம், நெல்லை, கோவை, தென்காசி ஆகிய 10 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

பூட்டானின் புனாகா பகுதியில் நேற்று இரவு நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 5 புள்ளி 8ஆக பதிவானது.

-------------

கோவாவில் புதிய தேசிய கல்விக் கொள்கையின் அமலாக்கம் குறித்து அம்மாநில முதலமைச்சர் திரு. பிரமோத் சாவந்த் தில்லியில் மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதானை சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார்.

-------------

ஜார்கண்டில் இருந்து இங்கிலாந்துக்கு முதல் முறையாக மாம்பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பது வேளாண் ஏற்றுமதியில் புதிய உத்வேகத்தை அளித்துள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

-------------

திருப்பூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து மாநில அமைச்சர் திரு. செங்கோட்டையன் ஆய்வு மேற்கொண்டார்.

-------------

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் மரக்கன்று நடும் இயக்கத்தை மாநில அமைச்சர் திரு. அருண்ராஜ் தொடங்கி வைத்தார்.

-------------

ராமநாதபுரத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்டங்கள் குறித்து மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. ராஜீவ் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

-------------

திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் மாவட்ட ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி ஆய்வு மேற்கொண்டார்.

-------------

நீதிமன்றத்தில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கு பணியிடங்களில் பாதுகாப்பு குறித்த சட்ட விழிப்புணர்வு முகாம் சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில் ராணிப்பேட்டையில் நடைபெற்றது.

-------------

தூத்துக்குடி முத்தையாபுரம் பகுதியில் தடை செய்யப்பட்ட போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

-லட்சுமணன்

-------------

சென்னை கொடுங்கையூர் குப்பை கொட்டும் தளத்தில் தீ தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாநகராட்சி ஆணையர் திரு. சமீரன் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

-------------

*விளையாட்டுச் செய்தி*

உலக யோகாசன சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ஹீனா ரோஜ்கர் தங்கப் பதக்கம் வென்றார்.

அகமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியில் சீனியர் மகளிர் B பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 40 தங்கம், 8 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

மொத்தம் 10 பதக்கங்களுடன் ஜப்பான் 2வது இடத்திலும், 3 பதக்கங்களுடன் சிங்கப்பூர் 3வது இடத்திலும் உள்ளன.

<<<<The End>>>>